# எஸ்.பி.எம். தமிழ் இலக்கியம் (KSSM) – கவிதை

‘அவனருளால்’

திருமதி புஷ்பவள்ளி சத்திவேல்
SMK TOK PERDANA, PERAK.

# எஸ்.பி.எம்.
# தமிழ் இலக்கியம் (9217)








| கவிதை |
| --- |
| 1. காலம் பறக்குதடா |
| 2. நாளை நமதே |
| 3. சஞ்சிக்கூலி |
| 4. ஞான வழி |
| 5. காலை அழகு |
| 6. சூரியன் வருவது யாராலே |
| 7. மடமை மூடிய இருட்டு |
| 8. வாழ்க்கையே ஒரு திருவிழா |
| 9. மயில் |
| 10. காவியமும் ஓவியமும் |
| 11. காடு |
| 12. பெண்கள் விடுதலைக் கும்மி |

# தமிழ் இலக்கியம் - எஸ்.பி.எம். தேர்வு அமைப்பு முறை (KSSM)

நேரம் : 2 மணி 30 நிமிடம்
மொத்தப் புள்ளி : 100

| பாகம் 1 | | |
|---|---|---|
| வினா | இலக்கிய வகை | புள்ளி |
| 1,2,3 | கவிதை | 10 |
| 4,5,6 | நாடகம் | 15 |
| 7,8,9 | நாவல் | 15 |
| மொத்தப் புள்ளி | | 40 |

| பாகம் 2 | | |
|---|---|---|
| வினா | இலக்கிய வகை | புள்ளி |
| 10/11 | கவிதை | 20 |
| 12/13 | நாடகம் | 20 |
| 14/15 | நாவல் | 20 |
| மொத்தப் புள்ளி | | 60 |

# கவிதை



# எஸ்.பி.எம். தமிழ் இலக்கியம் – கவிதை

## படிவம் 4

1. காலம் பறக்குதடா
2. நாளை நமதே
3. சஞ்சிக்கூலி
4. ஞான வழி
5. காலை அழகு
6. சூரியன் வருவது யாராலே

## படிவம் 5

1. மடமை மூடிய இருட்டு
2. வாழ்க்கையே ஒரு திருவிழா
3. மயில்
4. காவியமும் ஓவியமும்
5. காடு
6. பெண்கள் விடுதலைக் கும்மி

| எண் | கவிதை | கவிஞர் | பாடுபொருள் | மையக்கரு |
|---|---|---|---|---|
| 1 | காலம் பறக்குதடா | கவிஞர் கரு. திருவரசு | சமுதாயம் | தமிழர் முன்னேற்றம் |
| 2 | நாளை நமதே | கவிஞர் காசிதாசன் | வாழ்க்கை | தமிழர் தம் சிறப்புகளை அறிந்தால் எதிர்காலம் சிறக்கும் |
| 3 | சஞ்சிக்கூலி | கவிஞர் காரைக்கிழார் | சஞ்சிக்கூலி | தோட்டப்புறத் தமிழர்களின் அவலம் |
| 4 | ஞானவழி | கவிஞர் பொன்முடி | அறிவு | உயர்ந்தோர் வழி நிற்றல் |
| 5 | காலை அழகு | கவிஞர் வாணிதாசன் | இயற்கை | காலைப் பொழுதின் அழகு |
| 6 | சூரியன் வருவது யாராலே | கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை | இறை நம்பிக்கை | இறை ஆற்றலைப் போற்றுவோம் |
| 7 | மடமை மூடிய இருட்டு | கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் | அறியாமை | சமுதாயத்தில் சிலரின் பண்பற்ற போக்கு |
| 8 | வாழ்க்கையே ஒரு திருவிழா | கவிஞர் த. கோவேந்தன் | வாழ்க்கை | அன்பு |
| 9 | மயில் | கவிஞர் சுரதா | உயிரினங்கள் | மயிலின் அழகும் இயல்பும் |
| 10 | காவியமும் ஓவியமும் | கவிஞர் முரசு நெடுமாறன் | படைப்புணர்வு | குழந்தையின் கலை உணர்வைப் போற்றுவோம் |
| 11 | காடு | கவிஞர் பாதாசன் | காட்டின் வளம் | காடு காட்டும் வாழ்வியல் |
| 12 | பெண்கள் விடுதலைக் கும்மி | மகாகவி பாரதியார் | பெண்ணுரிமை | பெண் விடுதலை |

நன்றி :
கலைத்திட்ட
மேம்பாட்டுப் பிரிவு

## கவிதை இலக்கியக் கூறுகள்

பாடுபொருள்

மையக்கரு

நயங்கள்

1. ஓசை நயம்
2. அணிநயம்
3. சொல்நயம்
4. பொருள்நயம்

## பாடுபொருள்

கவிதையில் கவிஞர் எதைப் பற்றிப் பாடுகிறார் என்பதே பாடுபொருள்

## மையக்கரு

பாடுபொருளைக் கொண்டு கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்துகள்

# ஓசை நயம்

சந்தம்

எதுகை

இயைபு

மோனை

முரண்

1) எதுகை கவிதையின் தொடக்கச் சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றி வருவது எதுகை

எ.கா:

குறில் - குறில்
(ஒரே அளவு)

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

இரண்டாம் எழுத்து ஒரே ஓசை ஒன்றித்து வருதல்

எதுகை : தென்றல் - குன்றினில்

graphicpanic.com

## 2) மோனை : சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றி வருவது

| பிளத்தல் | அ | ஆ | ஐ | ஔ |
|---|---|---|---|---|
| குவித்தல் | உ | ஊ | ஒ | ஓ |
| இளித்தல் | இ | ஈ | எ | ஏ |

எ.கா :

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

மோனை :

தென்றல் – தேசமென்றே
குன்றினில் – கொட்டுங்கடி

த் + எ = தெ
த் + ஏ = தே

க் + உ = கு
க் + ஒ = கொ

graphicpanic.com

3) சந்தம் : சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள்- ஓசைப்பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி அமைவது.
சொற்களின் எழுத்துகள் அதே வரிசையில் அளவாலும் ஓசையாலும் ஒத்திருத்தல் வேண்டும்.



| உயிர் எழுத்துகள் , உயிர்மெய் எழுத்துகள் | |
|---|---|
| குறிலுக்குக் குறில் | நெடிலுக்கு நெடில் |
| தொ ட் ட - ப ட் ட | கா லை - சோ லை |
| எ த் த னை - அ த் த னை | பா ரு ங் க டி - கூ று ங் க டி |

| மெய்யெழுத்துகள் | | |
|---|---|---|
| வல்லினத்திற்கு வல்லினம் (க் ச் ட் த் ப் ற்) | மெல்லினத்திற்கு மெல்லினம் (ங் ஞ் ண் ந் ம் ன்) | இடையினத்திற்கு இடையினம் (வ் ல் ள்) |
| பாட்டு - காற்று | பந்தம் - அங்கம் | தோல்வி - வேள்வி |
| பா ட் டு<br>கா ற் று | ப ந் த ம்<br>அ ங் க ம் | தோ ல் வி<br>வே ள் வி |

குறிப்பு : ய் , ர், ழ் என்ற எழுத்துகள் சந்தக் கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.
ஃ என்ற ஆய்த எழுத்துக்கு ஃ என்ற எழுத்தே வர வேண்டும்.

graphicpanic.com

# 4) இயைபு :

சீர்களின் இறுதி அசை ஒன்றி வருவது.
கவிதை அடியில் இறுதியிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதாகும்.

எ.கா :

தாமரை மொட்டுக்குள்ளே - அழகு
தங்கிக் கிடக்குதடி ! - கதிர்
சாமரை விச்சினிலே - விரிந்து
சஞ்சலம் போக்குதடி

கிடக்குதடி – போக்குதடி

graphicpanic.com

## 5) முரண் தொடை :

சீர்கள் பொருளால் முரண்பட்டு வருவது

(எதிர் எதிர் கருத்து)

எ.கா :

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (குறள் -339)

உறங்குவது - விழிப்பது பொருள் முரண்படுவதால் முரண்தொடை

graphicpanic.com

# அணிநயம்

(கவிதையை அழகு செய்வன)

| பொருளணிகள் | கவிதையை அழகு செய்வன |
|---|---|
| 1) பின்வருநிலை அணி | முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் வருதல்<br>எ.கா :<br>சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று<br>தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி<br>வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி<br>வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் – உன்<br>வாணா ளெல்லாம் போரடித்தாய்! (சஞ்சிக் கூலி) |
| 2) திரிபு அணி | சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்று வருவது<br>எ.கா : - மாரடித்தாய் .... போரடித்தாய் (சஞ்சிக் கூலி )<br>- தொட்ட ..... பட்ட ( நாளை நமதே) |


| பொருளணிகள் | கவிதையை அழகு செய்வன |
|---|---|
| 3) சுவை அணி | மனித உணர்வுகளைப் பிரதிபலித்தல்<br><br>எ.கா: மீளும் வகைமொழிவார் தம்மோடும்<br>மோதிக் கெடுத்திடுவாய் (*காலம் பறக்குதடா* )<br>(கவிஞரின் கோப உணர்ச்சி வெளிப்படுதல்) |
| 4) இயல்பு/தன்மை நவிற்சி அணி | ஒன்றின் தன்மையை இயல்பாக அழகுபட நவில்தல்<br>எ.கா: பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்<br>பேசிக் களிப்போடு நாம்பாட<br>(*பெண்கள் விடுதலைக் கும்மி*) |
| 5) உயர்வு நவிற்சி அணி | இயற்கைக்கு அப்பால் ஒன்றை உயர்த்தியோ தாழ்த்தியோ மிகையாகக் கூறுதல்<br><br>எ.கா: உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்<br>(*காவியமும் ஓவியமும்* ) |

| பொருளணிகள் | கவிதையை அழகு செய்வன |
|---|---|
| 6) உவமை அணி | ஒத்ததை ஒப்பிட்டுக் கூறுதல்<br>எ.கா : - நகமும் சதையும் போல<br>- செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ (*மயில்*) |
| 7) உருவக அணி | உவமையைப் பொருளில் ஏற்றல்<br>எ.கா : அன்பு படர்ந்த கொம்பினிலே<br>அகந்தைக் குரங்கு தாவும் (*மடமை மூடிய இருட்டு*) |
| 8) தற்குறிப்பேற்ற அணி | அஃறிணையில் உயர்திணை போல் தன் கருத்தை ஏற்றுதல்<br>எ.கா : சேவல் அழைப்பினிலே (*காலை அழகு*) |

graphicpanic.com

| பொருளணிகள் | கவிதையை அழகு செய்வன |
| --- | --- |
| 9) முரண் அணி | முரணான இரு பொருள்களுக்கிடையே ஒருமைப்பாடு கற்பித்துக் கூறுவது<br>எ.கா: - சுடும் நிலவு சுடாத சூரியன் , - இது குழந்தை பாடும் தாலாட்டு<br>- ஊனவழிச் சென்றே......... ஞானவழி நிற்பாய்<br>(ஞான வழி) |
| 10) மடக்கு அணி | ஒரே சொல் அடிகளின் இரு இடங்களில் வெவ்வேறு பொருளைக் கொண்டிருத்தல்<br>எ.கா:<br>வட்ட நிலவினில் பட்ட கறையென<br>வாழ்க்கை யமைந்தது பாருங்கடி<br>வெட்ட வெளியினில் பட்ட மரமென<br>வேரற்றுப் போனதேன் கூறுங்கடி ( நாளை நமதே)<br><br>பட்ட - நிலவில் ஏற்பட்ட கறை<br>பட்ட - மடிந்துபோன மரத்தை உணர்த்துகிறது. |

| எண் | கவிதை | அணிநயம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பின்வருநிலை அணி | திரிபு அணி | தற்குறிப்பேற்ற அணி | சுவை அணி | உருவக அணி | உவமை அணி | உயர்வு நவிற்சி அணி | தன்மை நவிற்சி அணி | மடக்கு அணி |
| 1. | காலம் பறக்குதடா | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | |
| 2. | நாளை நமதே | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ |
| 3. | சஞ்சிக்கூலி | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | |
| 4. | ஞானவழி | | ✓ | | ✓ | ✓ | | | ✓ | |
| 5. | காலை அழகு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | | ✓ | |
| 6. | சூரியன் வருவது யாராலே | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | ✓ | |
| 7. | மடமை மூடிய இருட்டு | ✓ | ✓ | | ✓ | ✓ | | | ✓ | |
| 8. | வாழ்க்கையே ஒரு திருவிழா | ✓ | ✓ | | ✓ | ✓ | | | ✓ | |
| 9. | மயில் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | |
| 10. | காவியமும் ஓவியமும் | | | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 11. | காடு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | |
| 12. | பெண்கள் விடுதலைக் கும்மி | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | ✓ | |







# சஞ்சிக் கூலி

- கவிஞர் காரைக்கிழார்





இக்கவிதையின் மூலம் தேர்வு அணுகுமுறையைக் கற்றுக் கொள்வோம். வாருங்கள்....

# சஞ்சிக் கூலி




**பாடுபொருள்**

சஞ்சிக் கூலி

**மையக்கரு**

தோட்டப்புறத் தமிழர்களின் அவலம்



சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் - உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!







சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

graphicpanic.com

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? - உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?







தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்! - வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

- கவிஞர் காரைக்கிழார்

graphicpanic.com

# பாகம் 1:
# தேர்வு அணுகுமுறை

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் - உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!



சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

- கவிஞர் காரைக்கிழார்

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் மையக்கரு யாது? (2 புள்ளி)

→ விடை : தோட்டப்புறத் தமிழர்களின் அவலம்

- ❖ விடையை முழு வாக்கியமாக எழுதத் தேவையில்லை.
- ❖ கலைத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட பாடுபொருள்/ மையக்கரு மட்டும்தான் எழுத வேண்டும்.

graphicpanic.com

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் - உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

\- கவிஞர் காரைக்கிழார்



2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

→ விடை :

எதுகை : ச**ஞ்**சிக் – வ**ஞ்**சித்

பின்வருநிலை அணி :
வஞ்சித்தவனை <u>வாழ்த்தி வாழ்த்தி</u>

- நயங்கள் எனப் பொதுவாக வினவப்பட்டுள்ளதால் மாணவர்கள் ஓசைநயம், அணிநயம், சொல்நயம், பொருள் நயம் என எல்லாவற்றிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் கொடுக்கலாம்.
- விடைகளுக்கு விளக்கம் எழுதத் தேவையில்லை.
- எதுகைக்கு இரண்டாம் எழுத்தையும் மோனைக்கு முதல் எழுத்தையும் வட்டமிட்டு அல்லது கோடிட்டுக் காட்ட மறவாதீர்கள்.

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் - உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!



சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

\- கவிஞர் காரைக்கிழார்

3. (i) மாரடித்தாய் என்பதன் பொருள் யாது ? (2 புள்ளி)

→ விடை : இன்னல்பட்டாய்

(ii)

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

இவ்வடிகளில் கடுமையாக உழைத்தும் தமிழர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் எனக் கவிஞர் குறிப்பிடுகிறார் ?

→ விடை : தமிழர்கள் வறுமையில் வாழ்கின்றனர்

graphicpanic.com

# பாகம் 2:
# தேர்வு அணுகுமுறை





| கவிதை |
| --- |
| 1. காலம் பறக்குதடா |
| 2. நாளை நமதே |
| 3. சஞ்சிக்கூலி |
| 4. ஞான வழி |
| 5. காலை அழகு |
| 6. சூரியன் வருவது யாராலே |
| 7. மடமை மூடிய இருட்டு |
| 8. வாழ்க்கையே ஒரு திருவிழா |
| 9. மயில் |
| 10. காவியமும் ஓவியமும் |
| 11. காடு |
| 12. பெண்கள் விடுதலைக் கும்மி |



# கவிதை : பாகம் 2

## கேள்வி 10

## அல்லது

## கேள்வி 11



graphicpanic.com



நினைவில் வையுங்கள்

# கவிதைக் கருத்துகள்

தெரிநிலைக் கருத்து

புதைநிலைக் கருத்து

graphicpanic.com

## கேள்வி 10 : 20 புள்ளி

## 2 வகையில் கேள்வி10 அமையலாம்.

1 மேற்காணும் கவிதையின் தெரிநிலைக் கருத்துகளை விளக்கி எழுதுக. (20 புள்ளி)

2 மேற்காணும் கவிதையின் கருத்துகளை தொகுத்து / விளக்கி எழுதுக. (20 புள்ளி)

graphicpanic.com

## 10. மேற்காணும் கவிதையின் தெரிநிலைக் கருத்துகளை விளக்கி எழுதுக. (20 புள்ளி)

**விடையளிக்கும் அணுகுமுறை :**

1. முன்னுரை, கருத்து, முடிவுரை ஆகிய கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
2. கருத்துகளைக் கண்ணி வாரியாகத் தனித்தனிப் பத்திகளில் எழுத வேண்டும். (எ.கா : 4 கண்ணி → 4 பத்தி)
3. சொந்த நடையில் எழுதியிருக்க வேண்டும்; கவிதைநடையில்/உரைநடையில் இருத்தல் கூடாது.
4. கவிதை வரிகளை மேற்கோளாகக் காட்டத் தேவையில்லை.
5. புதைநிலைக் கருத்துகளை எழுதத் தேவையில்லை

# 10. மேற்காணும் கவிதையின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (20 புள்ளி)

விடையளிக்கும் அணுகுமுறை :

1. முன்னுரை, கருத்து, முடிவுரை ஆகிய கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
2. கருத்துகளைக் கண்ணி வாரியாகத் தனித்தனிப் பத்திகளில் எழுத வேண்டும். (எ.கா : 4 கண்ணி → 4 பத்தி)
3. சொந்த நடையில் எழுதியிருக்க வேண்டும்; கவிதைநடையில்/உரைநடையில் இருத்தல் கூடாது.
4. கவிதை வரிகளை மேற்கோளாகக் காட்டத் தேவையில்லை.
5. ஒரு புதைநிலைக் கருத்தை எழுத வேண்டும்.

graphicpanic.com

## பாகம் இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

**சஞ்சிக்கூலி**

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் — உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் — உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? — உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்! — வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

- கவிஞர் காரைக்கிழார்

10. மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]




## பாகம் இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

**சஞ்சிக்கூலி**

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் — உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் — உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? — உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்! — வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

- கவிஞர் காரைக்கிழார்

10. மேற்காணும் கவிதையின் **கருத்துகளைத் தொகுத்து** எழுதுக.

[20 புள்ளி]

முன்னுரை :

- கவிஞர் - காரைக்கிழார்
- கவிதை - சஞ்சிக் கூலி
- பாடுபொருள் - சஞ்சிக் கூலி
  /மையக்கரு - தோட்டப்புறத் தமிழர்களின் அவலம்
- தலைப்பைத் தொட்டு வாக்கியம்




மாதிரி முன்னுரை :

கவிதை வானில் மின்னும் விண்மீனாகத் திகழ்பவர் கவிஞர் காரைக்கிழார். இவரது கைவண்ணத்தில் உருவானதே ‘சஞ்சிக் கூலி’ எனும் கவிதையாகும். சஞ்சிக் கூலி எனும் பாடுபொருளைத் தாங்கி இக்கவிதை மலர்ந்துள்ளது. தோட்டப்புறத் தமிழர்களின் அவலநிலையைக் கவிஞர் இக்கவிதையில் நன்கு விளக்கியுள்ளார்.

graphicpanic.com

**சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று**
**தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி**
**வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி**
**வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் - உன்**
**வாணா ளெல்லாம் போரடித்தாய்!**



கவிதையின் கருத்துகளைப் பொருள் விளங்குமாறு விளக்கி எழுத வேண்டும்.
உரைநடைபடுத்தக் கூடாது.

அவ்வகையில், தமிழர்கள் மலேசியாவிற்கு ஆங்கிலேயரால் ஒப்பந்தக்கூலிகளாகக் கொண்டு வரப்பட்டது வரலாற்றுப் பதிவாக இருந்தாலும் அதையே காலம் காலமாகச் சொல்லிச் சொல்லி உழைப்புக்கேற்ற ஊதியம் தராமல் தங்களை ஏமாற்றியவர்களையே போற்றிக் கொண்டிருக்கும் தமிழர்களின் அறியாமையைக் கவிஞர் எடுத்துரைக்கிறார். அதோடு மட்டுமல்லாமல், தோட்டப்புறத்தில் பல இன்னல்களையும் எதிர்நோக்கி தம் வாழ்நாளெல்லாம் போராட்டங்களையே அனுபவித்து வரும் தமிழர்களின் அவலநிலையைக் கவிஞர் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார்.

graphicpanic.com

**சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?**
**சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?**
**கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்**
**கடைவா சலிலே நிற்கின்றாய் - உன்**
**கட்டுடலைத்தான் விற்கின்றாய்!**

தொடர்ந்து, ஒப்பந்தக் கூலிகளாய் வந்தாலும் தமிழர்களுக்கு வருமானம் கிடைக்கவே செய்தது. இருப்பினும், இன்னும் வறுமையில் வாடி நிற்கும் நிலை தமிழர்களை நிழலாகவே தொடர்வதைக் கவிஞர் விளக்குகிறார். தன்மானத்தை இழந்த அடிமைகளாகப் பிறரிடம் கையை ஏந்தி உடல் உழைப்புத் தொழிலாளர்களாக இருக்கும் அவலநிலையைக் கவிஞர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

graphicpanic.com

**காலை எழுந்த கடன்முடி யாமல்**
**கையில் வாளிக் கனம்குறையாமல்**
**பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்**
**பலனை முழுதும் கண்டாயா? - உன்**
**பங்கை முழுதாய்க் கொண்டாயா?**

மேலும், ஒவ்வொரு நாளும் காலையிலேயே தோட்டப்புறத் தமிழர்களின் போராட்டம் தொடங்கி விடுகிறது. காலை எழுந்ததும் தங்களது அன்றாடக் கடமைகளைக்கூட முடிக்காமல் தொழிலுக்கு அரக்கப் பறக்கச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கைக்கால் நோக, வியர்வை சிந்தி ரப்பர் மரங்களைச் சீவி அதில் கிடைக்கும் பாலை வாளியில் நிரப்பிக் கொடுத்ததைத் தவிர அவர்கள் வேறு எந்தப் பயனையும் பெறவில்லை. உழைப்பை மட்டும் அட்டையாய் உறிஞ்சிக் கொண்டு உழைப்புக்கேற்ற ஊதியம் தராத முதலாளிகளிடம் ஏமாளிகளாக நிற்கும் தமிழர்களின் அவலநிலையைக் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்.

graphicpanic.com

**தேடிய பணத்தில் ஓடிய செலவைத்**
**திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்**
**வாடிய நாளே வாய்த்திருக் காது**
**மற்றவர் போல நின்றிருப்பாய்! - வெறும்**
**மழுங்க னாகவா இன்றிருப்பாய்?**



இருப்பினும், தமிழர்கள் காடுமேடு திரிந்து தங்கள் இரத்தத்தையே வியர்வையாக்கி உழைத்துப் பெற்ற பணத்தை விரலுக்கேற்ற வீக்கம் என்பதற்கொப்ப சிக்கனமாகச் செலவு செய்து, சேமிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளத் தவறிவிட்டனர். அப்படிச் செய்திருந்தால் இன்று வறுமையில் வாடியிருக்கத் தேவையிராது. மலேசியத் திருநாட்டில் பிறரைப்போல வாழ்வில் முன்னேறி மற்றவர் மதிக்கும் வகையில் செல்வச் செழிப்போடு வாழ்ந்திருப்பர் என்றும் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார். அறிவுக் கூர்மை குறைந்தவர் என்ற தாழ்நிலையை அடைய வேண்டியிராது எனவும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

graphicpanic.com

# முடிவுரை :

ஆகவே, தோட்டப்புறத் தமிழர்களின் வறுமை வாழ்க்கைக்கான காரணங்களைக் கவிஞர் இக்கவிதையில் முன்வைத்து நம்மையும் சிந்திக்க வைத்துள்ளார். இந்நாட்டில் தமிழர்கள் சிந்தனை மாற்றம் பெற்றால் மட்டுமே நமது பொருளாதாரம் சீர்பெற்று வாழ்க்கை மேன்மையுறுமென்பது திண்ணம்.



முடிவுரையில் பரிந்துரை / சிறப்பு எழுதுங்கள்.

graphicpanic.com

**புதைநிலைக் கருத்து :**



கருத்துகளைத் தொகுத்து/ விளக்கி எழுதுக எனும் வினாவுக்கு ஒரு புதைநிலை கருத்தை எழுத மறவாதீர்கள்.

இந்தியர்கள் உழைக்கச் சளைக்காதவர்கள் என்பதை உலகமே அறியும். ‘உழைப்பே உயர்வு தரும்’ என்பது சான்றோரின் வாக்காக இருந்தாலும் இந்தியர்களுக்கோ முன்னேற்றம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. இதற்கு முக்கியக் காரணம் நமது அறியாமையும் ஏமாளித்தனமுமே காரணம் என்பது தெள்ளத் தெளிவு. ஏமாறுபவன் இருக்கும்வரை ஏமாற்றுபவன் இருக்கத்தான் செய்வான் என்பதால் இந்தியர்கள் தங்கள் உழைப்பின் பலனை அனுபவித்து வாழ எப்பொழுதும் விழிப்புணர்வோடு செயல்படுவது அவசியமாகும்.

graphicpanic.com

# கேள்வி 11 :

## உடைக்கப்பட்ட 2 கேள்விகள்

அ

நயங்கள் / ஓசைநயம்/ அணிநயம்

(10 புள்ளி)

ஆ

ஏற்பட்ட தாக்கம் / கிடைத்த படிப்பினைகள்/ கருத்துணர்தல்

(10 புள்ளி)

graphicpanic.com

**‘சஞ்சிக் கூலி’ கவிதையின் ஓசை நயம் மூன்றனை விளக்கி எழுதுக. ( 10 புள்ளி)**

**இக்கவிதையின் ஓசை நயங்களுள் ஒன்றாக எதுகை சிறந்து விளங்குகிறது எதுகை என்பது கவிதையின் தொடக்கச் சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றி வருவதாகும். எடுத்துக்காட்டாக, முதல் கண்ணியில், ‘சஞ்சி – வஞ்சி’ எனும் சீர்களில் முதலெழுத்துகளின் அளவு குறிலாகவும் இரண்டாம் எழுத்தான ‘ஞ்’ ஓசையால் ஒன்றியும் வந்துள்ளன.**

**மாணவர்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை:**

- 10 புள்ளி என்பதால் முன்னுரை, முடிவுரை எழுதத் தேவையில்லை.
- 10 புள்ளிக்கு **3 வகை ஓசை நயங்களை** விளக்கி எழுத வேண்டும்.
- ஒவ்வொரு **கூறுக்கும் பொருள்**, **எடுத்துக்காட்டு**, **விளக்கம்** எனப் பத்தியில் விளக்கி எழுதுங்கள்

மேலும், இக்கவிதையின் ஓசை நயங்களுள் ஒன்றாக **மோனையும்** சிறந்து விளங்குகிறது. மோனை என்பது சீர்களின் முதலெழுத்து ஓசையால் ஒன்றி வருவதாகும். **எடுத்துக்காட்டாக,** இரண்டாம் கண்ணியில், ‘காலை – கையில்’ எனும் சீர்களில் ‘கா –கை’’ எனும் முதலெழுத்துகள் ஓசையால் ஒன்றி வந்துள்ளன.

இதனைத்தவிர, இக்கவிதையின் ஓசை நயங்களுள் ஒன்றாக **சந்தமும்** சிறந்து விளங்குகிறது. சந்தம் என்பது சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் அல்லது ஓசைப்பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி அமைவது ஆகும். எடுத்துக்காட்டாக, நான்காம் கண்ணியில், ‘தேடிய – வாடிய’ எனும் சீர்களின் எல்லா எழுத்துகளும் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி வந்துள்ளன.

graphicpanic.com

**‘சஞ்சிக் கூலி’ கவிதையின் அணி நயம் மூன்றனை விளக்கி எழுதுக. ( 10 புள்ளி)**



சஞ்சிக் கூலி எனும் இக்கவிதையில் **பின்வருநிலை அணி** சிறந்து விளங்குகிறது. பின்வருநிலை அணி என்பது கவிதை அடிகளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் வருதல் ஆகும். எடுத்துக்காட்டாக, முதல் கண்ணியில்,

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி

எனும் அடிகளில் ‘சொல்லி’ எனும் சொல் மீண்டும் வந்து கவிதைக்கு நயம் சேர்த்துள்ளது.



**ஒவ்வொரு அணிக்கும், பொருள், எடுத்துக்காட்டு, விளக்கம் எனப் பத்தியில் விளக்கி எழுதுங்கள்.**

graphicpanic.com

இதனைத் தவிர்த்து, **திரிபு அணியும்** கவிஞருக்குக் கைக்கொடுத்துள்ளது. திரிபு அணி என்பது **சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்று வருவது ஆகும் .** எடுத்துக்காட்டாக, முதல் கண்ணியில்,

கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

எனும் அடியில், ‘நிற்கின்றாய் – விற்கின்றாய்’ எனும் சீர்களின் முதல் எழுத்துகளான ‘நி-வி’ மட்டும் வேறுபட்டிருக்க மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்று வந்துள்ளன.

graphicpanic.com

இதுமட்டுமல்லாது, **சுவை அணியும்** இக்கவிதைக்கு நயம் சேர்த்துள்ளது. சுவை அணி என்பது உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். எடுத்துக்காட்டாக,

கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

எனும் கவிதை வரிகள், தமிழர்களின் தங்கள் அறியாமையினால் முன்னேற்றதை எட்டாமல் இன்னும் வறுமை நிலையில் உழன்று வருவதை எண்ணிய கவிஞரின் மன ஆதங்கத்தை நன்கு உணர்த்துகின்றன.

graphicpanic.com

**‘சஞ்சிக் கூலி’ கவிதை உனக்குள் ஏற்படுத்திய தாக்கம் மூன்றனை விளக்கி எழுதுக. ( 10 புள்ளி)**

தாக்கம் =

கருத்து + உணர்வு + தீர்வு

சஞ்சிக் கூலி எனும் இக்கவிதை எனக்குள் பல தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. அவற்றுள், இந்தியர்கள் தலைமுறை தாண்டியும் இன்னும் தங்களைச் சஞ்சிக் கூலி என அடையாளப்படுத்தியே வாழ்கின்றனர். இந்தியர்களின் இத்தகைய நிலை எனக்குள் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. வாழ்க்கையில் கருப்பு அத்தியாயத்தைக் கடந்து புதிய பயணத்தைத் தொடர்ந்தால்தான் முன்னேற்றம் எனும் பரிமாணத்தை அடைய முடியும் என்பதைத் தமிழர்கள் உணராது இருப்பது வருந்தத்தக்கதே. எனவே, நான் மலேசிய நாட்டின் குடிமகன் என என்னை அடையாளப்படுத்தி முன்னேற்றப் பாதையில் பயணிக்க ஆயத்தமாக உள்ளேன்.

graphicpanic.com

இதனைத் தவிர, தமிழர்கள் உழைக்கத் தெரிந்தவர்களாக இருந்தாலும் பிழைக்கத் தெரியாவர்களாக உள்ளதால் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் உள்ளனர். இந்தக் கசப்பான உண்மை எனக்குள் வேதனையை உண்டாக்குகிறது. தமிழர்களின் அறியாமையும் ஏமாளித்தனமும் அவர்களை இந்நிலைக்கு ஆளாக்கி உள்ளனர் என்ற கவிஞரின் கூற்று என் சிந்தைக் கதவைத் தட்டியுள்ளது. ஆகவே, எனது உழைப்பில் பிறர் குளிர்காய விடுவதில் அர்த்தமில்லை என்பதால் எப்பொழுதும் விழிப்புணர்வுடன் செயலாற்றுவதோடு எனது உழைப்பின் முழுப்பலனை நான் பெற வேண்டுமெனக் கங்கணம் கட்டியுள்ளேன்.

graphicpanic.com

இதுமட்டுமல்லாது, இந்தியர்கள் வரவுக்கு ஏற்ப செலவு செய்து சிக்கனமாக வாழ வேண்டியதன் அவசியத்தை உணராது இருக்கின்றனர். இது எனக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறது. விரலுக்கேற்ற வீக்கம், சிறுகக் கட்டிப் பெருக வாழ் போன்ற சான்றோரின் அறிவுரைகளையெல்லாம் புறந்தள்ளி வாழும் மனப்போக்கினால்தான் இன்றும் நம் சமுதாயம் வறுமை எனும் அரக்கனின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்க வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, நான் சிக்கனத்தை வாழ்க்கையின் அடிப்படை கூறாகக் கடைப்பிடித்து வாழத் தொடங்கியுள்ளேன்.

graphicpanic.com

**‘சஞ்சிக் கூலி’ கவிதையின் படிப்பினை மூன்றனை விளக்கி எழுதுக. ( 10 புள்ளி)**



சஞ்சிக் கூலி எனும் இக்கவிதையின் மூலம் பல படிப்பினைகளைப் பெறலாம். அவற்றுள், இந்தியர்கள் தங்கள் அறியாமையைப் போக்கிக் கொள்ள வேண்டிய அவசியமாகும் என்பது முக்கியமான படிப்பினையாகும். இந்தியர்களின் உழைப்பை மட்டும் அட்டையாய் உறிஞ்சிக் கொண்டு உழைப்புக்குகேற்ற ஊதியம் தராமல் முதலாளி வர்க்கம் ஏமாற்றுகிறது. இதனை அறியாத அப்பாவி இந்தியர்கள் உழைப்பின் பலனை அனுபவிக்க முடியாமல் வறுமையில் தத்தளிக்கின்றனர். எனவே, இந்தியர்கள் எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

படிப்பினை + விளக்கம் + தீர்வு என 3 கூறுகளைக் கொண்டு பொதுவாக விளக்கி எழுதுக.

நீ பெற்ற படிப்பினை எனத் தலைப்பு அமைந்திருந்தால் எனக்கு/ நான் எனத் தன்மையில் எழுதுக.

graphicpanic.com

மேலும், இந்தியர்களிடம் சேமிப்புப் பழக்கம் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்ற படிப்பினையையும் இக்கவிதையின் மூலம் பெறலாம். இந்திய சமுதாயம் பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பதற்குச் சேமிப்புப் பழக்கம் இல்லாமையே முக்கியக் காரணாமாகும். சிறு துளி பெரு வெள்ளம் என்பதற்கொப்ப விரயத்தைக் குறைத்துத் திட்டமிட்டுச் செலவு செய்தால் பெருமளவு சேமிக்கலாம் என்பது வாழ்வியல் உண்மை. சின்னஞ்சிறு எறும்புகள்கூட மழைக்காலத்திற்கு உணவைச் சேமித்து வைக்கும் பொழுது ஆறறிவு படைத்த மனிதன் இதனைச் செயல்படுத்த மறுப்பது அறிவுடைமையாகாது. எனவே, வளமான எதிர்காலத்தைப் பெற இந்திய சமுதாயம் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வதை கடமையாகக் கொள்ள வேண்டும்.

graphicpanic.com

இதனைத் தவிர, இந்தியர்கள் சிந்தனை மாற்றம் பெற வேண்டும் என்ற படிப்பினையையும் இக்கவிதையின் மூலம் பெறலாம். காலம் காலமாகப் பிறரிடம் கைக்கட்டி அடிமைத் தொழில் செய்து வரும் நிலை மாற வேண்டும். வறுமைச் சங்கிலியை அறுத்தெரிந்து நாமும் இந்நாட்டில் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ முதலாளித்துவ நிலைக்கு உயர வேண்டியது அவசியமாகும். அதற்கு இந்திய சமுதாயம் தொழிற்துறை வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்டு பிற இனத்தாருடன் போட்டித்தன்மையை வளர்த்துக் கொள்ள எத்தனிக்க வேண்டும்.

graphicpanic.com

**இந்தியர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக விளங்கும் மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)**



இது கவிதை ஒட்டிய கருத்துணர் கேள்வி.

இந்தியர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக விளங்குவது அவர்களின் **அறியாமையே** ஆகும். தங்களுக்கு வஞ்சகம் செய்வாரையே அவர்கள் விசுவாசம் என்ற பெயரில் முழுமையாக நம்பி வாழ்கின்றனர். உழைக்கத் தெரிந்தும் பிழைக்கத் தெரியாத அப்பாவிகளாகவே இந்தியர்கள் உள்ளனர். உழைப்புக்கேற்ற ஊதியத்தைத் தாங்கள் பெறவில்லை என்று அறியாததால் வறுமையிலேயே அவர்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது. இதனாலேயே முன்னேற்றம் என்பது இந்தியர்களுக்கு எட்டாக்கனியாக உள்ளது.

graphicpanic.com

மேலும், இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு **சேமிப்புப் பழக்கம் இல்லாமையும் ஒரு** தடையாக உள்ளது. சிறு துளி பெரு வெள்ளம் என்பதற்கொப்ப கடுமையான உழைப்பினால் வரும் வருமானத்தில் விரயத்தைக் குறைத்துத் திட்டமிட்டுச் செலவு செய்தால் பெருமளவு சேமிக்கலாம் என்ற வாழ்வியல் உண்மையை அவர்கள் உணராதவர்களாகவே உள்ளனர். நிகழ்காலத்தை மட்டும் கருத்தில் கொள்ளும் அவர்கள் நாளையப் பொழுதைப் பற்றி அக்கறையில்லாமல் இருக்கின்றனர். இதன் காரணமாகவே, மற்ற இனத்தவரைப்போல் முன்னேற்றப் பாதையில் வெற்றிப் பீடுநடை போட முடியாமல் பரிதவிக்கின்றனர்.



இதுமட்டுமல்லாது, **சிந்தனை மாற்றம் இல்லாமையும்** இந்தியர்களின் முன்னேற்றதிற்குத் தடையாக உள்ளது. கால வெள்ளோட்டத்தில் தலைமுறை மாறினாலும் இன்னும் பிறரிடம் கைக்கட்டி அடிமைத் தொழில் செய்து வருவதிலேயே காலத்தைக் கடத்துகின்றனர். மாறாக, தாங்களும் முதலாளித்துவ நிலைக்கு வளர்ச்சிப் பெற வேண்டுமென்பதில் அவர்கள் முனைப்புக் காட்டுவதில்லை. இதனாலேயே இந்தியர்கள் வறுமைநிலையில் சிக்குண்டு கிடக்கின்றனர்.

graphicpanic.com

முயல்க...

வெல்க...

# நன்றி